தமிழகத்திற்கு 5 ஆயிரத்து 700 கோடி ரூபாயும், ஆந்திரப்பிரதேசத்திற்கு 5 ஆயிரத்து 655 கோடி ரூபாயும், கர்நாடகாவிற்கு 5 ஆயிரத்து 96 கோடி ரூபாயும், கேரளாவுக்கு 2 ஆயிரத்து 690 கோடி ரூபாயும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக உத்தரப்பிரதேசத்திற்கு 25 ஆயிரத்து 69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பீகாருக்கு 14 ஆயிரத்து 56 கோடி ரூபாயும், மத்தியப்பிரதேசத்திற்கு 10 ஆயிரத்து 970 கோடி ரூபாயும், மேற்குவங்கத்திற்கு 10 ஆயிரத்து 510 கோடி ரூபாயும் வரிப் பகிர்வாக விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் நுழைவுத் தேர்வில் இழப்பீட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்ட 6 தேர்வு மையங்களில் எழுதிய ஆயிரத்து 563 மாணவர்களின் தேர்வு முடிவுகள் மறு பரிசீலனை செய்யப்படுகிறது.

இதனால் நீட் தேர்வு எழுதியவர்களின் தேர்வு முடிவு தரவரிசை பாதிக்கப்படமாட்டாது என்று தேசிய தேர்வு முகமையின் தலைமை இயக்குநர் திரு. சுபோத் குமார் சிங் உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இந்த விவகாரம் தொடர்பாக 4 உறுப்பினர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர்கள் ஒரு வாரத்திற்குள் தங்கள் பரிந்துரைகளை அளிப்பார்கள் என்று கூறினார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் சேர்க்கை நடைமுறை பாதிக்கப்படமாட்டாது என்று நீட் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு திரு. சுபோத் குமார் சிங் உறுதியளித்துள்ளார்.

<<<<>>>>

நடப்புக் கல்வியாண்டுக்கான பாடத்திட்டம், பாடப்புத்தகங்கள், மாதிரி வினாத்தாள்கள் குறித்து பரப்பப்படும் தவறான தகவல் தொடர்பாக எச்சரிக்கையுடன் இருக்குமாறு மாணவர்களையும், பெற்றோர்களையும் சிபிஎஸ்இ. அறிவுறுத்தியுள்ளது.

சில ஆன்லைன் தளங்களில் கல்வி தொடர்பான காலாவதியான இணைப்புகள், தவறான செய்திகள் இடம்பெற்றுள்ளதால் அதனைத் தவிர்க்குமாறு மாணவர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

**"TNDIPR, Govt. of Tamil Nadu"** என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள வாட்ஸ் அப் சேனலில் பொதுமக்கள் இணைந்து அரசின் திட்டங்கள் மற்றும் செய்திகளை **QR Code**-ஐ ஸ்கேன் செய்து தெரிந்துகொள்ளலாம் என்று மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவித்தார்.

இன்று முதல் 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் என்று அவர் கூறினார்.

குமரிக் கடல், மன்னார் வளைகுடா, தமிழக கடலோரப் பகுதிகள், தெற்கு ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் அடுத்த 5 நாட்களிலும், கேரள – கர்நாடக கடலோர பகுதிகளில் அடுத்த 3 நாட்களிலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்று திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே ராமநாதபுரம் மாவட்ட கடற்பகுதியில் நாளை இரவு வரை 3 மீட்டர் உயரம் வரை பேரலைகள் எழக்கூடும் என்பதால் கடற்பகுதிக்கு யாரும் செல்ல வேண்டாம் என்று ஆட்சியர் திரு. விஷ்ணுசந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

மலாவி நாட்டு துணை அதிபர் திரு. **Saulos Chilima** மற்றும் 9 பேர் சென்ற விமானம், காணாமல் போய்விட்டதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

பொருளாதார நெருக்கடி காலத்தில் தங்கள் நாட்டுக்கு இந்தியா பெருமளவில் உதவி செய்ததாக இலங்கை மின்துறை அமைச்சர் திரு. **D.V. Chanaka** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் **Ghatkopar**-ல் விளம்பரப் பதாகைகள் சரிந்து விழுந்த விபத்து குறித்து, நீதிமன்ற விசாரணைக்கு அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் மேற்கொண்ட சோதனையில் ஒரு லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

<<<<>>>>

இணையவழி மோசடி மூலம் பணத்தை இழந்த நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டைச் சேர்ந்த நபரிடம், காவல்துறையினர், மீட்கப்பட்ட 6 லட்சத்து 96 ஆயிரம் ரூபாயை ஒப்படைத்தனர்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை தாமிரபரணி ஆற்று தரைப்பாலத்தில் தண்ணீரில் சிக்கித் தவித்த முதியவரை தீயணைப்புத் துறையினர் மீட்டனர்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட 333 கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திரு. பிரபுசங்கர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 10 பேருக்கு ஸ்மார்ட்ஃபோன்களை ஆட்சியர் திரு. கமல் கிஷோர் வழங்கினார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கான ஜமாபந்தி இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

